விடியல் இலக்கிய இதழ்

VIDIYAL ILAKKIYA ITHAZ - TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

மலர்: 1 Volume: 1 | இதழ்: 5 Issue: 5 | ஜூன் - 2021 June - 2021 | விலை: 25/- Price: Rs.25/-

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்

காட்டு நாய்கள்

வீட்டுவாசிகளான கதை

சங்க இலக்கியங்களை மொழிபெயர்ப்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள்!

பேழைக்குள் ஏந்திழை

அதைத் திற....

மொட்டை

காலத்தால் அழியா படைப்பு

பன்மொழிபெயர்ப்பாளர்

இளம்பாரதி...!

பன்மொழிபெயர்ப்பாளர் இளம்பாரதி...!

நேர்காணல் / புகைப்படங்கள்: புதுவை ரா. ரஜனி

இளையரசனேந்தல் கோவில்பட்டியில் உள்ள சிறு கிராமம். இங்குதான் இளம்பாரதி என்று நம் எல்லோராலும் அறியப்படும் திரு. ருத்ரதுளசிதாஸ் பிறந்தார். தெலுங்கு, மலையாளம், கன்னடம்,ஹிந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பல கதை, கவிதை, கட்டுரை, நாவல் படைப்புகளை தமிழுக்குக் கொண்டுவந்த.. வரும் மிக முக்கியமான எழுத்தாளர். 1998 இல் மலையாள எழுத்தாளர் எம். முகுந்தன் எழுதிய நாவல் 'மய்யழிக் கரையோரம்' என்பதை தமிழில் மொழிபெயர்த்ததற்காக 'சாகித்ய அகாடமி' விருது இவருக்கு கிடைத்தது. தற்போது வயது 88. சமீபத்தில் 3000 பக்கங்கள் கொண்ட தெலுங்கு நாவலை மொழிபெயர்த்தது இவரது சமீபத்திய சாதனை. விடியல் இலக்கிய இதழின் ஆலோசனைக் குழுவில் மிகச் சுறுசுறுப்பாக இயங்கும் அற்புத மனிதரான அவரோடு மொழிபெயர்ப்பு குறித்து சிறு உரையாடல்.



உங்கள் கல்லூரிப் பருவத்தில் படைப்பிலக்கியத்தில் ஆர்வமாக இயங்கி வந்தீர்கள். பல படைப்புகள் தமிழகத்தின் பல்வேறு பத்திரிக்கைகளில் பிரசுரமாயின. பிற்காலத்தில் மொழிபெயர்ப்புத் துறையில் ஏன் உங்களை ஈடுபடுத்திக் கொண்டீர்கள்?

1957 ஆம் ஆண்டில் எனக்கு சமூகக் கல்வி அமைப்பாளராக அரசுப் பணி கிடைத்தது. அந்தச் சமயத்தில் பணியிடைப் பயிற்சிக்காக எனக்கு ஆறு மாதங்கள் ஹைதராபாத்தில் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தது. அங்கு தெலுங்கு எழுத்துகளை கூட்டி எழுதக் கற்று, சொற்றொடர்களைப் படிக்க முடிந்தது. சந்த மாமா தெலுங்கு சிறுவர் பத்திரிகையை தொடர்ந்து படிக்க ஆரம்பித்தேன். பயிற்சி முடிந்ததும் எனது தெலுங்கு வாசிப்பு முயற்சியை வெளிப்படுத்தினேன். தெலுங்கு சிறுகதைகளையும் கவிதைகளையும் மொழி பெயர்த்து பத்திரிக்கைகளுக்கு அனுப்ப, அவை பிரசுரமாயின. அதனால், மொழிபெயர்ப்பில் பெரும் உற்சாகம் கொண்டேன். அந்த சமயத்தில் சென்னையில் த. நா. குமாரசாமி அவர்களை சந்திக்க நேர்ந்தது. அப்போது அவர் சொன்னார்: "நீங்கள்







மொழிபெயர்ப்புத் துறையில் அதிதீவிரமாக ஈடுபடுங்கள். உங்கள் மொழி நடை அதற்கு உதவியாக இருக்கும். தமிழில் பிற துறைகளில் கவனம் செலுத்த ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். எனவே, நீங்கள் தொடர்ந்து மொழி பெயர்ப்பில் ஈடுபடுங்கள்!" என்றார்.

தெலுங்கு மொழியில் தொடங்கிய நீங்கள், பிற மொழிகளிலும் புலமை பெற்றது எவ்வாறு?

தெலுங்கு கற்றுக் கொண்ட ஆர்வம் சிவகங்கையில் நான் வேதியியல் துறை பேராசிரியராக பணிபுரிந்தபோது, மலையாளம் கற்றுக் கொள்ள ஆவல் பிறந்தது. எனது ஓய்வு நேரத்தில் மலையாளம், கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன். இந்த அடிப்படையில் கன்னட மொழியையும் கற்றுக் கொண்டேன்.

சிலர் மொழிபெயர்ப்புத் துறையில் ஆர்வமாகத் தொடங்கி விட்டு,பின்னர் அமைதியாகி விடுவதின் ரகசியம் என்ன?

சொந்த மொழியில் முறையாக எழுதிப் பயிற்சி பெறாதவர்கள் மொழிபெயர்ப்புத் துறையில் உருப்படியாக எதுவும் செய்ய முடியாது. மொழிபெயர்க்கும் முயற்சியில் பலர் தோற்றதற்கு இதுதான் காரணம். சுய படைப்பாளன் ஏற்கனவே மொழிவளம் சொல் வளம் பெற்று இருப்பதால் பிறமொழி கருத்துகளை தன் மொழிக்கு மாற்றித் தர அவருடைய எழுத்து அனுபவம் கை கொடுக்கிறது என்பேன்.

தமிழில் மொழிபெயர்ப்பு படைப்புகள் தற்போது எந்த நிலையில் உள்ளது

கடந்த 20 ஆண்டுகளில் வகைப்பாட்டிலும் எண்ணிக்கையிலும் தரத்திலும் மொழிபெயர்ப்பு நூல்கள் நிறைய வந்திருக்கின்றன. அவை மனநிறைவையும் தந்திருக்கின்றன.

மொழிபெயர்ப்பில் உங்களது வழிகாட்டியாக யாரைக் கொண்டு இருக்கிறீர்கள்

உரைநடையில் கா.ஸ்ரீ. ஸ்ரீ., கவிதையில் கவிமணியையும் பின்பற்றுகிறேன். வாசகர்களிடம் என்னுடைய எழுத்து போய்ச் சேரும் போது தெளிவாக நேரடியாகப் புரிந்து கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும் என்பது என் நோக்கம். புரியவில்லை என்பதால், ஒரு மொழிபெயர்ப்பு வாசகரால் அப்புறம் வாசிக்கலாம் என தவிர்க்கப்பட்டு விடக்கூடாது.

தமிழ் பத்திரிக்கைச் சூழலில் மொழிபெயர்ப்புக்கு எந்த வகையில் இடம் இருக்கிறது?

ஒரு காலத்தில் சிறுபத்திரிகைகளில் ஒரு கதையோ, கட்டுரையோ, கவிதையோ மொழிபெயர்ப்பில் வெளியாகும். சில பிரபல வணிக பத்திரிகைகள் எப்போதாவது மொழிபெயர்ப்புக் கதைகளை வெளியிட்டார்கள். இதற்கு இடப்பற்றாக்குறை, வாசிப்பின் அணுகு முறையை வைத்தும் அதன் நிலையை அணுகவேண்டும். ஆனால், சமீப காலங்களில் மொழிபெயர்ப்பு படைப்புகளுக்கு மிகுந்த வரவேற்பை அனைத்து பத்திரிகைகளும் தர ஆரம்பித்துள்ளது ஆரோக்கியமான போக்கைக் காட்டுகிறது. திசை எட்டும் போன்ற மொழி பெயர்ப்புக்கான பத்திரிக்கைகளின் வருகையே இதற்குக் காரணம்.

இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?

நான் தற்பொழுது புதுச்சேரியில் வசிப்பதால் எனக்கான அமைதியான சூழலை ஏற்படுத்திக் கொண்டேன். எனது வயதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல் இன்றும் பல மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகிறேன். இதற்கு என் ஆர்வமும், கன்னடம், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி ,சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் இருக்கும் படைப்புகளை தமிழுக்கு முடிந்த அளவு கொண்டு வந்துவிட வேண்டும் என்ற ஆசையும் காரணம்.